# மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு டிப்ளோமா கற்கைநெறி - 2022

## களனிப் பல்கலைக்கழகம்
## மானிடப்பண்பாட்டியல் பீடம் - மொழியியல் துறை

*மேற்குறிப்பிட்ட கற்கை நெறிக்கான விண்ணப்பப்படிவங்களை மொழியியல் துறையில் 2022.05.22 முதல் 2022.06.24 வரை பெற்றுக்கொள்ளலாம்.

*மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் உரைபெயர்ப்பாளர்களுக்குத் தேவையான அறிவையும் பயிற்சியையும் வழங்குவதே இக்கற்கை நெறியின் பிரதான நோக்கமாகும்.

**மொழிபெயர்ப்புக் கற்கை நெறி::**

**I. தமிழ் - சிங்களம் மொழிபெயர்ப்புக் கற்கைநெறி** *(விண்ணப்பதாரர்கள் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தேர்ச்சியினைக் கொண்டிருத்தல் வேண்டும்)*

**II. ஆங்கிலம் - சிங்களம் மொழிபெயர்ப்பு கற்கை நெறி** *(விண்ணப்பதாரர்கள் ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் தேர்ச்சியினைக் கொண்டிருத்தல் வேண்டும்**

**கற்கை நெறிக்காலம்:** ஒரு வருடக் கல்வியாண்டு. (சனிக்கிழமைகளில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 4.00 வரை விரிவுரைகள் நடைபெறும். நாட்டில் நிலவுகின்ற தொற்றுநோய் நிலைமை காரணமாக விரிவுரைகள் நிகழ்நிலை (ழுடெைநெ) முறை மூலம் நடைபெறும். நாட்டில் சுமுகமான நிலை ஏற்பட்ட பின்னர் வகுப்பறை விரிவுரைகள் களனிப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.)

**கட்டணம்:** ரூ. 60,000.00.˙.- (அறுபதாயிரம் மட்டும்) (முதலாம் தவணைக் கட்டணமாக ரூ.35,000.00 செலுத்தப்படல் வேண்டும். இரண்டாம் தவணைக் கட்டணமான ரூ.25,000.00 பதிவு செய்யப்பட்ட மூன்று மாதங்களுக்குள் செலுத்தப்படல் வேண்டும்.)

**விண்ணப்பிப்பதற்கான தகுதி:** க.பொ.த (உயர்தரப்) பரீட்சையில் சித்தி அல்லது அதற்குச் சமமான தகைமைகள் அல்லது தேவைக்கேற்றவாறு 10 வருடங்களுக்குக் குறையாத தொழில்துறை அனுபவம்.

**கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்படும் முறை:** அனைத்து விண்ணப்பதாரர்களும் மொழியியல் துறையினால் நடத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**கற்கைநெறி ஆரம்பம்:** ஆவணி 2022.

**விண்ணப்பக் கட்டணம்:** எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் 055-100110667549 என்ற கணக்கு இலக்கத்திற்கு ரூ.750.00 பணத்தைச் செலுத்தி அதற்கான வரவுத்துண்டைப் பெற்றுக்கொள்ளவும். அதில் Diploma in Translation and Interpretation - 2022 (Request for application) எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளும் முறை:** விண்ணப்பப் படிவத்திற்கான கட்டணத்தைச் செலுத்தியதன் மூலம் வங்கியில் பெறப்பட்ட ரசீதின் ஸ்கேன் (scan) செய்யப்பட்ட நகலை *drti@kln.ac.lk* என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பம் மற்றும் தொடர்புடைய கூகுள் படிவம் எ ன் ப ன பதிலாக (reply) மொழியியல் துறையால் தங்களுக்கு அனுப்பப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை:** கூகுள் படிவத்தை ஆன்லைன் (online) மூலம் சமர்ப்பிக்க வேண்டும் மற்றும் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை பதிவுத்தபாலில் ?ஒருங்கிணைப்பாளர், மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு டிப்ளோமா, மொழியியல் துறை, களனிப் பல்கலைக்கழகம், களனி" (Coordinator, Diploma in Translation and Interpretation, Department of Linguistics, University of Kelaniya, Kelaniya) என்ற முகவரிக்கு 24.06.2022 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் Diploma in Translation and Interpretation - 2022 எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களும் இணைக்கப்பட வேண்டும்:** 1. பிறப்புச் சான்றிதழின் நகல் பிரதி 2. தேசிய அடையாள அட்டையின் நகல் பிரதி 3. க.பொ.த. உயர்தரப் பெறுபேற்றின் நகல் பிரதி 4. விண்ணப்பப்படிவக் கட்டணம் ரூ.750.˙. செலுத்திய மக்கள் வங்கி அசல் (original) ரசீது

---

*பாடநெறிக்கான மாணவர்களின் சேர்க்கை வரையறுக்கப்பட்டிருப்பதனால் முழுமையற்ற அல்லது தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம். விண்ணப்பங்கள் பெறப்படும் வரிசைக்கு ஏற்ப முன்னுரிமை அளிக்கப்படும்.*

*மேலதிக விபரங்களை 011-2908786 அல்லது 011-2908793 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாகப்*

***பதிவாளர், களனிப் பல்கலைக்கழகம் - 2022.05.14***